## பாடம் 15

# நண்பர்களின் விருந்து

அமிலன் இந்த வருட ஆரம்பத்திலிருந்தே எதிர்பார்த்திருந்த நாளும் வந்தது. அது, அவனுடைய வாழ்வில் மறக்க முடியாத ஒரு நாளாகும். ஏனென்றால், அமிலன் முதற் தேவநற்கருணை பெற்ற தினமாகும். தேவநற்கருணை மூலம் கிறிஸ்து நாதரைச் சந்திக்கலாம் என்பதை அமிலன் அறிந்திருந்தான். ஆகவே அந்த நேரம் வரும் வரை அமிலன் மிகவும் ஆவலோடு காத்திருந்தான். அவன் நற்கருணை மூலம் இயேசுவைப் பெற்றுக் கொண்ட போது அவனுக்குத் தன்னுள் ஒரு மாற்றம் ஏற்பட்டது தெரிந்தது. இயேசுவிடம் அவனுக்கு அன்பும், மதிப்பும் ஏற்பட்டது. அமிலன் ஆலயத்திலிருந்து வீட்டிற்கு வருவதற்கு முன்னர் இயேசுவைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தனக்கு உதவிய அனைவரிடமும் விடைபெற்று நல்லாசியும் பெற்றான். பின்னர் தாய் தந்தை ஆகிய இருவருக்கும் நடுவில் மோட்டார் சைக்கிளில் ஏறி இருந்த போது அவனுக்கு அவனது குழந்தைப் பருவம் ஞாபகத்திற்கு வந்தது.

சிறிது தூரம் செல்லும் போது அவனது நண்பன் தாசன் தனியாகப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டான். தாசனும் அன்று அமிலனுடன் முதற் தேவ நற்கருணை பெறறுக்கொண்டான். ஆனால் அவன் தனியாக வந்து தனியாகவே போவதைக் கண்ட அப்பா மோட்டார் சைக்கிளை நிறுத்தினார்.



**அமிலன் :** தாசன்! ( தாசனின் கண்களில் கண்ணீர் நிறைந்து வழிந்தோடுகிறது )
தாசன் ஏன் அழுகிறீர்கள்?

**தாசன் :** அமிலன், எங்கள் குடும்பத்தினருக்குச் சம்பந்தப்பட முடியவில்லை.

**அமிலன் :** ஏன்? என்ன காரணம்.

**தாசன் :** அப்பா வேலை செய்யும் இடத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது, தவறுதலாக அவருடைய கை இயந்திரத்தினுள் சென்று விரல் எலும்புகள் எல்லாம் முறிந்து, வைத்தியசாலையில் இருக்கிறார்.

**அமிலன்** : தாசன் இது ஒன்றுமே எங்களுக்குத் தெரியாது. யாருமே எங்களுக்குச் சொல்லவும் இல்லை. அப்பாவுக்காக நான் கட்டாயமாகச் செபிக்கிறேன். நல்ல இயேசு விரைவில் உன் அப்பாவைக் குணமாக்குவார்.

**தாசன்** : நான் போகிறேன் அமிலன்.

**அமிலன்** : எங்கே போகிறீர்கள் தாசன்?

**தாசன்** : அம்மாவுடன் வைத்தியசாலைக்குச் செல்லுகிறேன்.

**அமிலன்** : தாசன் கொஞ்சம் நில்லுங்கள்.

**அமிலனின் தாய்** : மகன் வாருங்கள், நேரமாகி விட்டது.

**அமிலன்** : அம்மா, தாசனின் தகப்பனுக்கு என்ன நடந்தது, என்று கேட்டுப் பாருங்கள்.

**அம்மா** : என்ன மகன்? என்ன நடந்தது? (நடந்ததை எல்லாம் விபரித்தான் அமிலன்.)

**அமிலன்** : வைத்தியசாலையிலிருந்து வந்த பின் மத்தியானம் நீங்கள் உங்கள் தம்பியையும், தங்கையையும் கூட்டிக் கொண்டு எங்கள் வீட்டிற்கு வாருங்கள். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் வீட்டிற்குச் சாப்பாடு அனுப்புவோம்.


**தாசன்** : வேண்டாம் அமிலன். வீண் சிரமம் வேண்டாம். உங்கள் வீட்டிற்கு நிறைய விருந்தினர்கள் வருவார்கள். அவர்கள் அழகாக உடுத்திக் கொண்டு வருவார்கள். என்னிடம் நல்ல உடுப்பும் இல்லை. ஆனபடியால் நான் வரவில்லை.

**அமிலன்** : நீங்கள் வரவில்லையானால், இனிமேல் ஒரு நாளும் உங்களுடன் கதைக்க மாட்டேன்.

**நந்தை** : மகன் தாசன், நீங்கள் ஆயத்தமாக இருங்கள், நான் உங்களை அழைத்துக் கொண்டு செல்ல வருகிறேன். இன்றுபின் நேரம் அப்பாவைப் பார்ப்பதற்கு வைத்தியசாலைக்குச் செல்வோம்.

நண்பர்களின் கஷ்டங்களில், வேதனைகளில் பங்கு கொண்டு அவர்களை ஆறுதல்படுத்த வேண்டும். உங்களுக்குக் கிடைப்பதை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். உங்களுடைய திறமைகள் ஆற்றல்கள் என்பவைகளை உங்கள் நண்பர்களின் நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் நீங்கள் இயேசுவின் நண்பர்களாக இருக்க முடியும். இயேசு உங்களை அன்பு செய்வது போல நீங்களும் உங்கள் நண்பர்களையும், பகைவர்களையும் அன்பு செய்யுங்கள். அப்போது, இயேசு உங்களுக்குத் தேவையான அனைத்தையும் நீங்கள் கேட்காமலே தந்தருள்வார்.

அமிலனின் சந்தோஷம் இருமடங்காகியது. அமிலன் வீட்டு விருந்தினர்கள் தாசன் வீட்டார் மட்டுமே. அவர்கள் மிகவும் இன்பமாக அன்றைய நாளைக் கழித்தார்கள். பிற்பகல் எல்லோருமாகச் சேர்ந்து அமிலனின் தந்தையைப் பார்க்கச் சென்றார்கள்.



**உங்களுக்கு ஒரு நல்லுரை**

1. அமிலனின் நற்பண்புகள் இரண்டு எழுதுக.
2. இயேசுவைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முன் நடைபெறும் ஆயத்த வகுப்புக்களில் தவறாது பங்கு கொள்ளுங்கள்.
3. பொதுச் செபங்களை மனனம் செய்யுங்கள்.
4. வசதியான எல்லா நாட்களிலும் திருப்பலியில் பங்கு கொள்ளுங்கள்.
5. கிறிஸ்து நாதரின் முன்மாதிரிகையைப் பின்பற்றி உம்மால் செய்யக் கூடிய சிறு பணிகள் மூன்று எழுதுக.
6. அவற்றில் ஒரு பணியை உங்கள் ஆசிரியருடன் சேர்ந்து செயற்படுத்துங்கள்.